உழவர்கரை நகராட்சி
புதுச்சேரி – 5

-3 SEP 2020

# அறிவிப்பு

தேசிய பசுமைத் தீர்பாயம் 24-01-2020 மற்றும் 20-05-2020 தேதியிட்ட உத்தரவுகளில் உரிய நெறிமுறைகளை கடைபிடிக்காமல் பொது வெளிக்கு சுகாதார கேட்டை ஏற்படுத்தும் வகையில் கால்நடை வளர்போர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு உத்தரவிட்டது. மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் மாட்டுப்பண்ணைகள் வைத்திருப்போர் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளை 08-07-2019 ல் வெளியிட்டுள்ளது. இதை புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு வாரிய இணையதளத்தில் காணலாம் [https://dste.py.gov.in/ppccmainhtm.].

மேலும் புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973, பிரிவு 345, 346, 347 ன்-படி கால்நடை (மாடு, எருமை, ஆடு, பன்றி) வளர்போர் நகராட்சியிடம் அனுமதி / உரிமம் பெற்றிருக்க வெண்டும். எனவே உழவர்கரை நகராட்சி பகுதியில் கால்நடை வளர்போர் இவ்வறிவிப்பு கண்ட 15 நாட்களுக்குள் நகராட்சியின் உரிமம் பெற விண்ணப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது. அப்படி உரிமம் பெறாதவர்கள் / பெற விண்ணப்பிக்காதவர்கள் மீது மேற்படி சட்டப் பிரிவுகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம் நகராட்சியின் வலைதளத்திலிருந்து பெறலாம் அல்லது நகராட்சியின் சுகாதாரப் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இணையதள முகவரி: www.oulmun.in

OULGARET MUNICIPALITY PUDUCHERRY-605 005

Kandasamy
03/9/2020
(மு. கந்தசாமி)
ஆணையர்

A.Sangothari Sys.12/e/tamilnote